## க.பொ.த (சா.தரம்) - உதவிக் கருத்தரங்கு - 2013

## வரலாறு - வினாப்பத்திரம் I


## புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இலக்கம் | விடை இலக்கம் |
|---|---|
| **(1)** | 3 |
| **(2)** | 2 |
| **(3)** | 4 |
| **(4)** | 2 |
| **(5)** | 1 |
| **(6)** | 1 |
| **(7)** | 3 |
| **(8)** | 3 |
| **(9)** | 1 |
| **(10)** | 4 |
| **(11)** | 3 |
| **(12)** | 4 |
| **(13)** | 3 |
| **(14)** | 1 |
| **(15)** | 2 |
| **(16)** | 1 |
| **(17)** | 2 |
| **(18)** | 1 |
| **(19)** | 4 |
| **(20)** | 4 |

| வினா இலக்கம் | விடை இலக்கம் |
|---|---|
| **(21)** | 4 |
| **(22)** | 2 |
| **(23)** | 2 |
| **(24)** | 2 |
| **(25)** | 2 |
| **(26)** | 3 |
| **(27)** | 2 |
| **(28)** | 1 |
| **(29)** | 4 |
| **(30)** | 3 |
| **(31)** | 1 |
| **(32)** | 4 |
| **(33)** | 4 |
| **(34)** | 2 |
| **(35)** | 2 |
| **(36)** | 2 |
| **(37)** | 3 |
| **(38)** | 3 |
| **(39)** | 1 |
| **(40)** | 1 |

# க.பொ.த (சா.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2011
## வரலாறு II
## புள்ளி வழங்கும் திட்டம்

1. (அ) (i)





ஓர் இடத்துக்கு 1 புள்ளி வீதம் 1 × 10 = 10 புள்ளிகள்

[பக் 2 ஐப் பார்க்க

1. (அ) **(ii)**

## க.பொ.த (சா.தரம்)
## உதவிக் கருத்தரங்கு - 2013




/ பக் 3 ஐப் பார்க்க

# க.பொ.த (சா.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2011
## வரலாறு II
## புள்ளி வழங்கும் திட்டம்

## பகுதி I

1 அ. (i) இலங்கைப்படம் (10 புள்ளிகள்)

(ii) உலகப்படம் (08 புள்ளிகள்)

ஆ. (i) A - முல்லேரியா

B - கொன்ஸ்தாந்திநோப்பிள்

C - இலங்கைதுறை (லங்காபட்டுன)

D - சிவனொளிபாத சிகரம், சமனலபாத (1 × 4 புள்ளிகள்)

(ii) 1. ஹென்றி ஸ்டில் ஒல்கொட்

2. அமெரிக்கா நாட்டைச் சேர்ந்தவர்

3. பிரம்மஞான சங்கம்

4. நாலந்த, ஆனந்த, தர்மராஜ, மஹிந்த ஆகிய பௌத்த பாடசாலைகள் (1 × 4 புள்ளிகள்)

(ii) 1. கலீலியோ கலீலி

2. இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்

3. தொலைநோக்கி

4. செய்முறை விஞ்ஞானத்தின் தந்தை (1 × 4 புள்ளிகள்)

## பகுதி II

2 (i) இயக்கர், நாகர், தேவ, இராட்சச இனங்கள் (1 × 3 புள்ளிகள்)

(ii) A - மல்வத்து ஓயா / கதம்ப நதி / அருவி ஆறு

B - கோண நதி / கலா ஓயா

C - மகாவாலுக்கா நதி / மகாவலி கங்கை

D - கரிந்தா நதி / கிரிந்தி ஓயா (1 × 4 புள்ளிகள்)

(iii)
- ★ முக்கியமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்
  - தானிய பயிர் செய்கை, விலங்கு வேளாண்மை, சேனைப் பயிர்செய்கை, உள்நாட்டு வியாபாரம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.
- ★ விவசாய உபகரணங்களை உற்பத்தி செய்தல், வீட்டுப் பாவனைக்காக உபகரணங்கள் உற்பத்தி செய்தல், ஆடை உற்பத்தி கிராம மட்டத்தில் நடைபெற்றமை.
- ★ பொருட்கள் பண்டமாற்று முறையில் கைமாறியமை

விடயம் 02 புள்ளிகள்
விபரம் 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

(iv)
- ★ மக்களின் பிரதான சீவனோபாயமாக நெற்செய்கை விளங்கியமையால் நீரை சேமித்து வைக்கக்கூடியதாக இருத்தல்
- ★ ஆற்று நீர் நெற்செய்கைக்கு போதாமை
- ★ மழைவீழ்ச்சி வருடத்தில் பருவகாலங்களில் மாத்திரம் கிடைத்தல்
- ★ கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சி போதியதாக இன்மை
- ★ சனத்தொகை அதிகரிப்பினால் விவசாய நிலங்கள் விஸ்தரிக்கப்பட்டமை

விடயம் 03 புள்ளிகள்
விபரம் 03 புள்ளிகள்
மொத்தம் 06 புள்ளிகள்

/ பக் 4 ஐப் பார்க்க

3. (i) A - கொறவாக்கல்
B - நடராஜர் சிலை
C - சத்மஹல் பிரசாதய (ஏழடுக்கு மாளிகை) (1 × 3 புள்ளிகள்)

(ii) P - குளத்திலிருந்து மேலதிக நீரை வெளியேற்றல்

Q - குளக்கட்டுக்கு ஏற்படும் நீரின் அமுக்கத்தை சமப்படுத்தி கலிங்கல் மூலம் நீரை வெழியேற்றல்

R - குளத்தின் பிரதான அணை உடைப்பெருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் குளத்து நீர் முழுமையாக வெளியேறாமல் பாதுகாத்தல் / குளத்தின் நீர் அமுக்கத்தால் குளத்தின் பிரதான அணை பாதிப்படையாமல் பாதுகாத்தல்

S - கிளையாறுகள் மூலம் பிரதான குளத்தில் சேறும் வண்டலும் படிவதைத் தடுக்கின்றது. குளத்தில் நீர் குறைவடையும் காலங்களில் சிறு குளங்களிலுள்ள நீரை பெறக்கூடியதாக இருத்தல் (1 × 4 புள்ளிகள்)

(iii)
- ★ பௌத்த சமயத்தின் அறிமுகத்தினால் அமைதியான, சமாதானமான வாழ்க்கை முறைக்குப் பரிச்சயமடைதல்.
- ★ சங்கமித்தாவின் வருகையுடன் பல கலைநுட்பங்கள் தெரிந்த கலைஞர்களின் வருகையால், உருவாகிய பௌத்த சிற்ப, சித்திர, கட்டிட கலைகளின் அறிமுகம்.
- ★ இயற்கைச் சக்திகளின் வணக்கத்திலிருந்து விலகி முறையான ஒரு சமயத்தை பின்பற்றுதல்
- ★ இலக்கிய மரபுகளின் தோற்றமும் எழுத்துகளின் தோற்றமும் உருவாதல்

| | |
|---|---|
| விடயம் | 02 புள்ளிகள் |
| விபரம் | 03 புள்ளிகள் |
| மொத்தம் | 05 புள்ளிகள் |

(iv)
- ★ நீர்ப்பாசன அமைப்புகள் அழிந்தமையினால் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் போனமை. / நீர்ப்பாசன தொகுதிகளை திரும்பவும் புனரமைக்க முடியாமை
- ★ பௌத்த பிக்குமார் ஏனைய பிரதேசங்களுக்கு குடிபெயர்ந்தமையினால் மக்கள் சமயத் தலைமைத்துவத்தை இழந்ததுடன் சமூக தொடர்புகளையும் இழந்தனர்.
- ★ மக்கள் ஏனைய பிரதேசங்களுக்கு குடிபெயர்ந்தமை
- ★ நீர்ப்பாசன தொகுதிகளுடன் இணைந்திருந்த உத்தியோகத்தர்களை படிப்படியாக இழந்தனர்.
- ★ மலேரியா போன்ற தொற்றுநோய்களின் பரவுதல்
- ★ அரச பரம்பரையினர் அழிந்தமை

| | |
|---|---|
| விடயம் | 02 புள்ளிகள் |
| விபரம் | 04 புள்ளிகள் |
| மொத்தம் | 06 புள்ளிகள் |

4. (i) குத்தில காவிய, செலலிகினி சந்தேசய, பரவி சந்தேசய (1 × 3 = 3)

(ii)
- ★ கோட்டை இராச்சியத்துடன் இலங்கையின் வட பிரதேசத்தை இணைத்துக் கொண்டமை
- ★ மலையரட்டையில் ஏற்பட்ட சிளர்ச்சியை அடக்கியமை
  உ-ம் : ஜோத்திய சித்தானோவின் கிளர்ச்சி
- ★ வியாபார கொடுக்கல் வாங்கலை அடிப்படையாகக் கொண்டு தென்னிந்தியாவின் அதி வீரராமபட்டினத்தை தாக்கியமை
- ★ வன்னிப் பிரதேசத்தை இணைத்துக் கொண்டமை
- ★ விஜயநகரப் பேரரசின் துறைமுகம் ஒன்றை ஆக்கிரமித்தமை (2 × 2 = 4)

(iii) இவ்வினாவிற்கு புவியியல், காலநிலைக் காரணிகள் கலந்துரையாடப்படல் வேண்டும்.
- ★ சமதரையான நிலங்கள் கிடைக்கப்பெறாமையினால் நெற்செய்கை ஒடுக்கமான பள்ளத்தாக்குகளில் இடம்பெற்றது.
- ★ உயர் நிலங்கள் நெற்செய்கைக்குப் பொருத்தமற்றிருந்ததினால் வாசனைத் திரவியங்கள், காய்கறிகள், பழங்கள், தென்னை, சேனைப் பயிர்செய்கை ஆகியன பயிரிடப்பட்டன.

/ பக் 5 ஐப் பார்க்க

- ★ அதிகமான மழைவீழ்ச்சி காரணமாக பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு தேவையேற்படவில்லை. மேலும் தரைத்தோற்றமும் இவ்வாறான பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைப்பதற்கு ஏற்றதாக இருக்கவில்லை. எனவே விவசாயம் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாக நடைபெற்றது.
- ★ வருடம் பூராகவும் இப்பிரதேசங்களுக்கு மழைவீழ்ச்சி கிடைத்தமையினால் விவசாயம் மழையை நம்பி மேற்கொள்ளப்பட்டது.
- ★ தென்மேற்குப் பிரதேசங்களில் காணப்பட்ட காடுகளில் இயற்கையாக வளர்ந்த பெருந்தொகையான கறுவாவும் வீட்டுத் தோட்டப்பயிராக வளர்க்கப்பட்ட மிளகும் வர்த்தகப் பொருட்களாக சேகரிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| விடயம் | 02 | புள்ளிகள் |
| விபரம் | 03 | புள்ளிகள் |
| மொத்தம் | 05 | புள்ளிகள் |

(iv)
- ★ ஆட்சியாளர்களிடையே ஒற்றுமையின்மை காணப்பட்டமை. 7ஆம் புவனேகபாகு தனது சகோதரர்களை சந்தேகித்தமை
- ★ 7ஆம் புவனேகபாகு மாயாதுன்னையுடன் இருந்த முரண்பாடு காரணமாக போர்த்துக்கேயரின் உதவியை நாடினான். மாயாதுன்னை கள்ளிக்கோட்டை சம்மோரினின் உதவியை நாடினான்.
- ★ கோட்டை இராச்சியத்திலிருந்து வெளியேற்றிய முஸ்லிம்கள் தொடர்பாக மாயாதுன்னை, 7ஆம் புவனேகபாகுவுடன் முரண்படல்
- ★ 7ஆம் புவனேகபாகு தனது பேரனை போர்த்துக்கேயரிடம் ஒப்படைத்தல்
- ★ தர்மபாலன் போர்த்துக்கேயரினால் மதமாற்றம் செய்யப்பட்டமை.
- ★ யாழ்பாணம், கண்டி, கோட்டை ஆட்சியாளர்கள் மத்தியில் ஒற்றுமையின்மை

| | | |
|---|---|---|
| விடயம் | 02 | புள்ளிகள் |
| விபரம் | 04 | புள்ளிகள் |
| மொத்தம் | 06 | புள்ளிகள் |

5. (i)

| | | |
|---|---|---|
| கோட்டை | - 7ஆம் புவனேகபாகு | |
| ரைகம | - ரைகம பண்டார / மத்தும பண்டார | |
| சீதாவாக்கை | - மாயாதுன்னை | (1 × 3 = 3) |

(ii)

A - கரலியந்த பண்டார
B - தொனா கதரீனா / குசுமாசன தேவி
C - கீர்த்தி ஶ்ரீ இராஜசிங்கன்
D - யோன் டொயிலி (1 × 4 = 4)

(iii) **அரசியல்**
- ★ கண்டிப் பிரதேசத்தில் உறுதியான சுதந்திர இராச்சியத்தை உருவாக்கியமை
- ★ புதிய அரச வம்சத்தை கண்டி இராச்சியத்தில் உருவாக்கியமை
(குசுமாசன தேவியை மணம் முடித்து பேராதெனிய வம்சத்தை உருவாக்கியமை)
- ★ போர்த்துகேயரின் ஆக்கிரமிப்புகளை வெற்றிகரமாக தோற்கடித்தமை

**சமயம்**
- ★ கண்டியில் வெஹர விகாரையைப் புனர்நிர்மாணம் செய்தமை.
(கடலாதெனிய, லங்காதிலக்க, ரிதிவிகாரை, தெகல்தொருவ விகாரைகளை புனரமைத்தமை)
- ★ புனித தந்ததாதுவை தெல்கமுவ விகாரையிலிருந்து கொண்டுவந்து கண்டி தலதா மாளிகையில் வைத்தமை
- ★ பர்மாவிலிருந்து (மியன்மார்) புத்த பிக்குகளை வரவழைத்து திரும்பவும் உபசம்பத சடங்கை கொண்டு வந்தமை
- ★ சிவனொளிபாத மலை விகாரையின் பொறுப்பை பௌத்த சங்கத்துக்கு மீண்டும் வழங்கியமை.
- ★ தலதா ஊர்வலம் (பெரஹர) ஆரம்பிக்கப்பட்டமை

| | | |
|---|---|---|
| விடயம் | 02 | புள்ளிகள் |
| விபரம் | 04 | புள்ளிகள் |
| மொத்தம் | 06 | புள்ளிகள் |

/ பக் 6 ஐப் பார்க்க

(iv) ★ 1815ம் ஆண்டளவில் கண்டி இராச்சியம் தொடர்பாக போதிய தகவல்கள் பிரித்தானியருக்கு கிடைத்தமை
★ பிரதானிகளுக்கும் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனுக்குமிடையில் ஒற்றுமையின்மை காரணமாக பகைமை வளர்ந்தமை
★ யோன் டொயிலியின் தந்திரோபாய நடவடிக்கைகள் (மன்னனை மதுபானத்துக்கு அடிமையாக்கல், கண்டியில் இரகசிய வலைப்பின்னலை உருவாக்கியமை, மிகவும் அந்தரங்க இரகசியங்களை பெற்றுக்கொள்ளல்)
★ சில கண்டி பிரதானிகள், ஆங்கிலேயருக்கு நம்பிக்கையாக இயங்குதல்
★ எகலபொலவின் மனைவியினையும் குடும்பத்தினரையும் கொடூரமாக கொலை செய்தமையால் மக்களால் மன்னன் வெறுக்கப்பட்டான்.
★ கண்டி மன்னன் பொது மக்களுக்கு வழங்கிய கொடூரமான தண்டனைகள் காரணமாக வளர்ந்த பகைமை
★ கண்டி மன்னன் நாயக்க மன்னனாக இருந்தமையினாலும் பிக்குகளுக்கு வழங்கிய தண்டனைகளாலும் வளர்ந்த பகைமை

விடயம் 03 புள்ளிகள்
விபரம் 03 புள்ளிகள்
மொத்தம் 06 புள்ளிகள்

6. (i) 1. திரு. டி. எஸ். சேனாநாயக்க
2. திரு. எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்கா
3. திரு. டபிள்யு. தஹநாயக்கா (1 × 3 = 3)

(ii) A - இரட்டை ஆட்சி
B - டி மியுறன் குழு
C - கோல்புறூக்
D - சேர். ஒலிவர் குணதிலக்க (1 × 4 = 4)

(iii) ★ விவசாய குடியேற்றங்களின் விரிவாக்கம்
★ பல்நோக்கு நீர்பாசன திட்டங்களின் ஆரம்பம். உ-ம்.: கல்ஓயா, உடவளவை, மகாவலிகங்கை
★ பழைய நீர்ப்பாசனத் திட்டங்களின் புனர்நிர்மானம்
★ நெல் ஆராய்ச்சி நிலையங்களின் உருவாக்கம்
★ உத்தரவாத விலைத்திட்டத்தினை நெல்லுற்பத்திக்கு வழங்குதல்
★ உரமானியங்கள் வழங்குதல்
★ ஓய்வூதிய வசதிகளையும் கடன் திட்ட வசதிகளையும் காப்புறுதி வசதிகளையும் விவசாயிகளுக்கு வழங்குதல்
★ விவசாயிகளுக்கு ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்குதல்

விடயம் 02 புள்ளிகள்
விபரம் 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

(iv) ★ புதிய கல்விச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தல்
★ பாடவிதான மாற்றங்கள். உ-ம்: தொழினுட்ப பாடங்களின் அறிமுகம், கணினி பாடங்களை இணைத்தல்
★ பாடவிதான விரிவாக்கம் உ-ம்: கணினி, தொழில்சார் பாடங்களின் அறிமுகம்.
★ தேசிய கல்விக் கல்லூரிகள் (National College of Education) விரிவாக்குதல்.
உ-ம் : மகாவலி கல்விக் கல்லூரி, ஹாபிடிகம ஆரம்ப பயிற்சிக் கல்லூரி, பிங்கிரியா கல்விக் கல்லூரி, சிறிபாத கல்விக் கல்லூரி)
★ கிராமிய பாடசாலைகளுக்கு அதிக வசதிகள் வழங்குதல். உ-ம் : நூலகம், கணினி வசதிகள், மைதான வசதிகள்
★ மாணவர்களுக்கு போஷனை வழங்கும் திட்டங்களை வழங்குதல். உ-ம் : மாணவர்களுக்கு மதிய போஷனம்
★ மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்கள், இலவச சீருடைகள் வழங்குதல்
★ புலமை பரிசில் திட்டங்களின் விரிவாக்கம்
★ பல்கலைக்கழக கல்வியின் விரிவாக்கம்
★ ஆசிரியர் பயிற்சிகள் விரிவாக்கம்

விடயம் 03 புள்ளிகள்
விபரம் 03 புள்ளிகள்
மொத்தம் 06 புள்ளிகள்

/ பக் 7 ஐப் பார்க்க

## பகுதி III

7. (i) இந்திரன், வருணன், அக்கினி, யமன் (1 × 3 = 3)

(ii) A - காசி B - அஜாசத்
C - மகா அலெக்செண்டர் D - கௌடில்யர் (1 × 4 = 4)

(iii)
- ★ மக்களின் நன்மைக்காக பெருந்தெருக்கள் வசதிகளை மேம்படுத்தல்
- ★ ஓய்வுக்கான மண்டபங்கள் அமைத்தல்
- ★ கிணறுகள், குளங்கள் அமைத்தல்
- ★ நிழலின் பொருட்டு வீதியின் இரு மருங்கிலும் மரங்களை நாட்டுதல்
- ★ மனிதர்களுக்குப் போலவே மிருகங்களுக்கும் வைத்தியசாலைகள் அமைத்தல்
- ★ பிரம்மணீய, ஆஜீவர், ஜைன மதங்களையும் அம்மதங்களின் மதத்தலைவர்களையும் மதித்ததுடன் அவர்களுக்கு ஆதரவும் வழங்குதல்
- ★ நாட்டு மக்கள் அனைவரையும் தனது பிள்ளைகளாக மதித்தல்

விடயம் : 2 புள்ளிகள்
விளக்கம் : 3 புள்ளிகள்
மொத்தம் 5 புள்ளிகள்

(iv) விடையினை சித்திர, சிற்ப, கட்டிட, இலக்கிய, கல்வி, சமய விடயங்களின் அடிப்படையில் விளக்கலாம்.

1. சமயம் -
   - ★ இந்துசமயம் வளர்ச்சியடைதல்
   - ★ விஷ்ணு வழிபாடும், சிவன் வழிபாடும் நிலவுதல்
   - ★ இலக்குமி வழிபாடும், சக்தி வழிபாடும், கணபதி வழிபாடும் நிலவுதல்
   - ★ மகாயான பௌத்தம் வளர்ச்சியடைதல்

2. கல்வி நிலை
   - ★ பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய முப்பிரிவினருக்கு மட்டுமே கல்வி பெறும் உரிமை
   - ★ பிராமணருக்கு கல்வி கற்கவும் கற்பிக்கவும் உரிமை
   - ★ குருகுலக் கல்வி நிலவுதல்
   - ★ பரந்த விடயப் பரப்புடன் கலைத்திட்டம் விளங்குதல்
   - ★ பௌத்த உயர் கல்வி நிலையங்கள் வளர்ச்சியடைதல்
     உ-ம் : நாலந்தா, வலஹி

3. இலக்கியம்
   - ★ சமஸ்கிருத இலக்கியம் வளர்ச்சியுறல்
   - ★ நவரத்தினங்கள் என்றழைக்கப்பட்ட 9 அறிஞர்கள் அக்காலத்தில் வாழ்தல்
   - ★ உலகின் சிறந்த இலக்கிய படைப்பான சகுந்தலை என்ற நாடகம் உருவாதல்
   - ★ காளிதாசனின் மேகதூதம், இரகுவம்சம், குமாரவம்சம் தோன்றியமை

4. சிற்பக் கலை
   - ★ மதுரா மரபு முறையான சிற்பங்கள் செதுக்கப்படல்
     உ-ம் : சாரணாத் புத்தர் சிலை
   - ★ இந்துக் கடவுளரின் சிலைகளைச் செதுக்குதல்
     உ-ம் : சிவன், பார்வதி சிலைகள்

5. கட்டடக்கலை
   - ★ செங்கல், கற்றூண்கள் பயன்படுத்தி ஆராமைகள், விகாரைகள், சைத்தியங்கள் அமைத்தல் வளர்ச்சியடைதல்
   - ★ சமயக் கட்டடங்கள் அமைத்தல் வளர்ச்சியடைதல்
   - ★ அஜந்தா, எல்லோரா போன்ற குகை விகாரைகள் அமைத்தமை
   - ★ அலங்கார செதுக்கல் வேலைகள் செய்யப்பட்டமை
   - ★ பௌத்த தூபி, ஆராமைத் தொகுதி என்பன இக்காலத்தில் வளர்ச்சி அடைந்தன. உ-ம் : புத்தகாயா, நாலந்த

6. சித்திரக்கலை
   - ★ இக்காலத்தைச் சேர்ந்த அஜந்தா, எல்லோரா குகை ஓவியங்கள் பிரசித்தி பெற்றமை

விடயம் : 2 புள்ளிகள்
விளக்கம் : 4 புள்ளிகள்
மொத்தம் 5 புள்ளிகள்

/ பக் 8 ஐப் பார்க்க

8. (i) A - பெரிய பிரித்தானியா

B - ஸ்பெயின்

C - ஒல்லாந்து / நெதர்லாந்து (1 × 3 = 3)

(ii)
- ★ ஊக்குவிப்புகள் வழங்குவதின் மூலமாக கடற்பயணங்களை ஊக்குவித்தல்
- ★ கடற் பயணங்களை மேற்கொள்பவர்களுக்கு மேன்மையான பட்டங்கள் வழங்குதல்
- ★ கப்பல் பழுதுபார்க்கும் ஆய்வு நிலையமொன்று வின்சன்ட் முனையில் நிறுவுதல்
- ★ கடற்பயணங்களுக்கு அபாயகரமான 'புயல் முனையினை நன்னம்பிக்கை முனையாக பெயரிடல்

(2 + 2 = 4)

(iii)
- ★ உள்நாட்டில் மூலப்பொருட்கள் பற்றாக்குறையாக இருந்தமையினால் வெளிநாடுகளில் வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளல்
- ★ கைத்தொழில்களின் அபிவிருத்தியினால் உண்டான அதிகப்படியான இலாபங்களை வேறு நாடுகளில் முதலீடு செய்வதற்காக
- ★ ஏனைய நாடுகளுடன் போட்டிபோடுவதற்காக
- ★ முடிவுப் பொருட்களுக்கு சந்தைகள் பெற்றுக்கொள்வதற்காக

| | |
|---|---|
| விடயம் : | 2 புள்ளிகள் |
| விளக்கம் : | 3 புள்ளிகள் |
| மொத்தம் | 5 புள்ளிகள் |

(iv) **நன்மையான விளைவுகள்**
- ★ உற்பத்திகள் அதிகரித்தமையினால் சந்தைகள் விரிவடைந்தமை
- ★ உலகில் ஏற்றமதி-இறக்குமதி பொருளாதாரம் உருவாகியமை
- ★ உட்கட்டமைப்புகள் விரிவடைந்தமை
  உ-ம் : வீதிகள், தொடர்பாடல், வங்கிகள், மின்சாரம், நீர் வசதிகள்
- ★ அதிகப்படியான உற்பத்திகள் காரணமாக விலைகள் குறைந்தமை
- ★ தரமான பொருட்களின் உற்பத்தி அதிகரித்தமை

**தீமையான விளைவுகள்**
- ★ செல்வந்த முதலாளிகளினதும் தொழிலாளர்களினதும் வர்க்கங்கள் தோற்றம் பெற்றதினால் சமூக ஏற்றத்தாழ்வுகளும் பணக்கார ஏழை வர்க்கங்கள் தோற்றம் பெற்றன.
- ★ குடியேற்றங்களைப் பெற்றுக்கொள்வதில் போட்டிகள் உருவாகியமை.
- ★ அதிகப்படியான தொழிலாளர்கள் தொழிற்சாலைகளுக்கு அண்மையில் குடியிருப்பதினால் சேரிகள், கொட்டில்களின் தோற்றம்
- ★ நகரமயமாக்களின் காரணமாக மக்கள் செறிவு அதிகரித்தல்
- ★ மூலவளங்கள் அழிவடைதல
- ★ நிலம், நீர், வளி மாசடைதல்

| | |
|---|---|
| விடயம் | 02 புள்ளிகள் |
| விபரம் | 04 புள்ளிகள் |
| மொத்தம் | 06 புள்ளிகள் |

9. (i) நட்பு நாடுகளின் அணி - 3 பிரான்சு

மத்திய ஐரோப்பிய வல்லரசு அணி - 1 - இத்தாலி, 2 - ஜேர்மனி (1 × 3 = 3)

(ii)
- ★ நாடுகளுக்கிடையில் தோன்றும் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளல்
- ★ பொருளாதாரத் தடைகளை விதிப்பதன் மூலம் ஆக்கரமிப்புக்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
- ★ மனித குணத்தின் சமாதான வாழ்க்கைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- ★ சர்வதேச ஒத்துழைப்பையும் புரிந்துணர்வையும் மேம்படுத்தல்
- ★ சிறிய நாடுகளின் சுதந்திரம், சுயாதீனம் என்பவற்றைப் பாதுகாத்தல் (2 + 2 = 4)

[ பக் 9 ஐப் பார்க்க

(iii)
★ ஐரோப்பிய நாடுகளின் குடியேற்றங்களுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுப்பதில் ஐக்கிய அமெரிக்கா நாடுகள் முன்னிலையில் விளங்குதல்

★ ஜனநாயகத்தையும் முதலாளித்துவத்தையும் நாடுகளின் மத்தியில் பரப்புவதின் மூலமாக முன்னைய ஐரோப்பிய குடியேற்றங்களை ஐக்கிய அமெரிக்காவின் அணியுடன் சேர்த்துக்கொள்ளல்

★ மார்ஷல் திட்டத்தின் மூலம் இரண்டாம் உலக மகா யுத்தத்தினால் பாதிப்புற்ற நாடுகளுக்கு பொருளாதார உதவிகள் வழங்குவதின் மூலமாக தனது அணியுடன் சேர்த்துக்கொள்ளல்.

★ 'நேடோ' (NATO) அமைப்பின் மூலமாக முதலாளித்துவ நாடுகளை தனது அணியில் சேர்த்துக்கொள்ளல்

★ 'இரகசிய உளவுச் சேவை' (CIA) யின் செயற்பாடுகள் மூலமாக ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிரான நாடுகளின் மீது எதிரான நடவடிக்கைகள் எடுத்தல்.

விடயம் : 2 புள்ளிகள்
விளக்கம் : 3 புள்ளிகள்
மொத்தம் 5 புள்ளிகள்

(iv)
★ குடியேற்றங்களை அமைத்த நாடுகளின் மன்னராட்சி இல்லாதொழிதல்

★ பர்மா, இலங்கை, இந்தியா, கானா, கெனியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா நாடுகள் சுதந்திரம் பெற்றுக்கொண்டமை

★ ஐக்கிய அமெரிக்காவினதும் சோவியட் ரஷ்யாவினாதும் தலைமையில் இரு அணிகள் தோற்றம் பெற்றமை. பிற்காலங்களில் ஐக்கிய அமெரிக்கா வல்லரசாக திகழ்தல்

★ இரு அணிகளினதும் அதிகாரங்களிலிருந்து விடுபடுவதற்கு அணிசாரா நாடுகளின் அமைப்பு உருவாகியது.

★ இராணுவங்கள் மூலமாக நாடுகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காக நாடுகளின் இரகசிய சேவைகளின் அமைப்புகள் தோற்றம் பெற்றமை

★ யூகோஸ்லேவியா, இஸ்ரேயில் போன்ற புதிய நாடுகளின் தோற்றம்.

விடயம் 03 புள்ளிகள்
விபரம் 03 புள்ளிகள்
மொத்தம் 06 புள்ளிகள்

10. (i) சமூக, பொருளாதார சபை
நம்பிக்கை பொறுப்புச் சபை
செயலகம் (1 × 3 = 3)

(ii)
★ ஐக்கிய அமெரிக்கா அரசுகள்
★ ரஷ்யா
★ ஐக்கிய இராச்சியம் (பிரித்தானியா)
★ பிரான்ஸ்
★ சீனா (1 × 4 = 4)

(மேல்வருவனவற்றுள் ஏதாவது நான்கு நாடுகள்.)

(iii)
★ பெர்லின் பிரச்சினை
★ கியூபா நெருக்கடி
★ கம்புச்சியப் பிரச்சினை
★ சுயெஸ் நெருக்கடி
★ கொரியாப் பிரச்சினை

(மேல்வருவனவற்றுள் ஏதாவது இரு பிரச்சினைகளின் போது ஐக்கிய நாடுகளின் செயற்பாடுகளை கலந்துரையாடலாம்.)

விடயம் : 2 புள்ளிகள்
விளக்கம் : 3 புள்ளிகள்
மொத்தம் 5 புள்ளிகள்

(iv) சார்பான கருத்துக்கள்

- ★ வளைகுடா நெருக்கடி - ஐக்கிய அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்து போது ஐக்கிய நாடுகள் அதனை தடுக்க முடியவில்லை.
- ★ இன்றுவரை, இஸ்ரேயீல், பலஸ்தீன் பிரச்சினைகளுக்கு ஒருவித தீர்வும் காண முடியவில்லை. (ஐக்கிய அமெரிக்கா இஸ்ரேலின் பக்கம் சாருதல்)

எதிரான கருத்துக்கள்

- ★ சுயேஸ் நெருக்கடியை தீர்த்து வைத்தல்
- ★ கொரியாப் பிரச்சினையையும் கியூபா நெருக்கடியையும் பேர்லின் பிரச்சினையையும் தீர்த்து வைத்தல்
- ★ பலஸ்தீனத்தில் இஸ்ரேல் நாட்டினரால் காட்டப்பட்ட சுவர், சட்டத்துக்கு விரோதமானது எனக் கூறுதல்.

| | |
|---|---|
| விடயம் | 02 புள்ளிகள் |
| விபரம் | 04 புள்ளிகள் |
| மொத்தம் | 06 புள்ளிகள் |

(சார்பாகவும் எதிராகவும் ஒவ்வொரு கருத்தையேனும் முன்வைத்தல்)

* * *